**கவனிக்க.-** *2015.10.16 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1938 - 2015 ඔක්තෝබර් මස 23 වැනි සිකුරාදා - 2015.10.23

*1938 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1386 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1387 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2015, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# மாகாண சபை அறிவித்தல்கள்

**தென் மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 (1) "அ" பகுதியில் வரைவிலக்கணம் படி 1944 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, 1944 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, 1945 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கட்டளைச்சட்டங்களின் மற்றும் 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பிள்ளைகள் மற்றும் இளைஞர் சம்பந்தமான கட்டளைச் சட்டத்தின் 48 ஆவது பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாங்களின்படி தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், காலி -கடவத் சதர பிரதேச செயலாளர் தொகுதியில் இலக்கம் 14 மடவலமுல்ல கிராம அலுவலர் பிரிவில் இலக்கம் அ. தி. கா. 43 உடைய திட்டத்தின் இல. 2 காணித்துண்டில் அமைந்துள்ள மகளிர் சிறுவர் இல்லம் தடுப்பு இல்லமாக நியமித்து கிதுலம்பிடிய மகளிர் தடுப்பு இல்லமாக பிரகடனம் செய்யப்பட்டதென இத்தால் அறியத்தருகின்றேன்.*

வீரசுமன வீரசிங்க,
விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார,
கிராம அபிவிருத்தி கலாசரம் மற்றும்
கலை விவகார சமூக நலன்புரி நன்னடத்தை
மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவை
மகளிர் விவகார மற்றும் கட்டிட பொருளாதார
மேம்பாட்டு வீடுகள் மற்றும்
கட்டிட நிர்மாணத்துறையும் மனித சக்தி மற்றும்
தொழில் வாய்ப்பு அமைச்சு,
தென் மாகாணம்.

*2015, புரட்டாதி 8.*

*10-739/1*

---

**தென் மாகாண மாகாண சபை**

*தென் மாகாண சமூக நலன்புரி நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவை மகளிர் விவகார திணைக்களம்*

**நன்னடத்தை உத்தியோகத்தர் நியமித்தல்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான) ஏற்பாடுகள் 2 (1) 'அ' பகுதியின் வரைவிலக்கணம் படி 1947 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, சட்டத்தினால் மற்றும் 1948 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1944 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றம்செய்தோர் பாதுகாவலில் வைக்கும் கட்டளைச் சட்டத்தின் 18(3) ஆம் பிரிவின்கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி கீழே அட்டவணையின் முதலாவது நிரலில் பெயர்கொண்ட நன்னடத்தை அலுவலர் தென் மாகாணத்தில் சகல சட்ட நீதிமன்ற அதிகார எல்லைகளில் உத்தியோகபூர்வமாக செயற்படுவதற்காக II ஆவது நிரலில் குறிப்பிட்ட திகதியிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார் என இத்தால் அறியத்தருகின்றேன்.*

மகேஸ் இராஜித கருணாநாயக,
சமூக நலன்புரி நன்னடத்தை மற்றும்
சிறுவர் பாதுகாப்புச் சேவை,
மகளிர் விவகார சேவை,
மாகாண ஆணையாளர்,
தென் மாகாணம்.

*2015, புரட்டாதி 2.*

**அட்டவணை**

| தொடர் இல. | நிரல் I<br>பெயர் | நிரல் II<br>திகதி |
|---|---|---|
| 1. | திருமதி சீ. டி. ஜயசிங்க | 1990.01.01 |
| 2. | திரு. பிரேமசந்திர சுதுசிங்க | 1997.02.17 |
| 3. | திருமதி கே. பீ. ஜீ. தம்மி புஸ்பமாலி | 1997.02.17 |
| 4. | திருமதி என். பீ. கருணாவதீ | 1997.04.30 |
| 5. | திருமதி என். ஜீ. ரம்யலதா | 2002.04.01 |
| 6. | திரு. ருவன் சாந்த கால்லகே | 2002.04.01 |
| 7. | திருமதி ஜீ. எச். ஏ. டி. சஜீவனீ | 2002.04.01 |
| 8. | திரு. பீ. எச். திஸ்ஸ குமார | 2002.04.01 |
| 9. | திருமதி ஜீ. என். மாலனி | 2002.04.01 |
| 10. | திருமதி ஏ. ஜீ. டி. ருபிகா | 2002.04.01 |
| 11. | திருமதி டி. வி. இந்திரானி | 1997.02.17 |
| 12. | திரு. பீ. எச். எஸ். பிரியந்ஜன் | 2002.04.01 |
| 13. | திரு. ரோஹன குமாரநாயக | 2002.04.01 |
| 14. | திருமதி எம். ஜீ. சமிந்தா பத்மினி | 2002.04.01 |
| 15. | திருமதி எஸ். கே. சந்திரசீலி | 2002.04.01 |
| 16. | திரு. ஏ. எல். ஏ. திலகரத்ன | 2002.04.01 |
| 17. | திரு. ஜீ. ஏ. ஜீ. சாந்த குமார | 2002.04.01 |
| 18. | திரு. ஜகத் சாந்த மாவனாநேஹேவா | 2005.09.21 |
| 19. | திரு. கே. பி. லியனாச்சி | 2005.09.21 |
| 20. | திருமதி கே. பீ. டி. எஸ். தஹநாயக | 2005.09.21 |
| 21. | திரு. எச். எல். ஆர். சுரேஸ் | 2005.09.21 |

10-739/2

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையில் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) II "ஆ" பிரிவிற்கு (III தரத்திற்கு)/பயிற்றுவிக்கும் தரத்திற்கு, படவரை கலைஞரை பயிற்றுவிக்கும் தரத்திற்கு அலுவலர்களை ஆட்சேர்க்கும் திறந்த போட்டிப் பரீட்சை - 2015

வடமேல் மாகாண அரசாங்க சேவையில் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) II "ஆ" பிரிவு (III தரம்) இற்காக நாடளாவிய மற்றும் தொழில்நுட்ப அலுவலர் பயிற்றுவிக்கும் தரம், படவரைகலைஞர் பயிற்றுவிக்கும் தரம் ஆகிய பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக வடமேல் மாகாணத்தினுள் நிரந்தரமாக குடியிருக்கும், தகைமையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1. **பொது தகைமைகள்:**

1.1 விண்ணப்பதாரிகள் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

1.2 வடமேல் மாகாண அதிகாரப் பிரிவினுள் விண்ணப்பப் படிவம் கோரப்படும் கடைசித் திகதிக்கு அண்ணளவாக தொடர்ந்து 3 வருடங்கள் நிரந்த வதிவிடத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். (தொழில்நுட்ப அலுவலர் (சிவல்) II "ஆ" பதவியினை தவிர)

1.3 விண்ணப்பப் படிவம் கோரப்படும் கடைசித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்;

1.4 விண்ணபதாரிகள் தேகாரோக்கியமுடையவராகவும் நல்ல மனநிலையுடையவராகவும் இருக்க வேண்டியதுடன் நல்லொழுக்கமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

*2.* **கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்நுட்ப தகைமைகள் :**

| பதவிப் பெயர் | பதவிக்கான க. பொ. த. (சா.த.) தகைமை | ஒவ்வொரு பதவிக்கான க. பொ. த. (உ. தர) தகைமை | தொழில்நுட்ப தகைமை |
|---|---|---|---|
| 1. தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) II "ஆ" பிரிவு (III தரம்) | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். | க. பொ. த. (உ.த) பரீட்சையில் பிரயோக கணிதம்/ தூய கணிதம்/ இணைந்த கணிதம் மற்றும் பௌதிக விஞ்ஞானம் உட்பட விஞ்ஞான பாடங்கள் 3 இனை ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் | (i) மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்) பெற்றிருத்தல்;<br>அல்லது<br>(ii) தேசிய தொழில் பயிற்சியும் தொழில்நுட்ப பயிற்றுவிக்கும் அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியலாளர் டிப்ளோமா (சிவில்) பெற்றிருத்தல்;<br>அல்லது<br>(iii) உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியலாளர் (சிவில்) பெற்றிருத்தல் ;<br>அல்லது<br>(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படுகின்ற தொழல்நுட்ப டிப்ளோமா (சிவில்) பெற்றிருத்தல் ;<br>அல்லது<br>(v) இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற சிவில் பொறியியலாளர் பரீட்சையில் 1 ஆம் பகுதி சித்தியடைந் திருத்தல் வேண்டும்;<br>அல்லது<br>(vi) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்கூறப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கப்படுகின்ற நிறுவனங்களை விசாரித்து கருத்து பெற்றுக்கொண்ட பின்பு மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகைகளிலும் பொருத்தமானது என்று இலங்கை தொழில்நுட்ப சேவைச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தொழில்நுட்ப தகைமைகளை பெற்றிருத்தல். |
| 2. தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) பயிற்றுவிக்கும் தரம் (ஒரு வருட) | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். | க. பொ. த. (உ.த) பரீட்சையில் பிரயோகக் கணிதம்/ தூய கணிதம்/ இணைந்தக் கணிதம் மற்றும் பௌதிக விஞ்ஞானம் உட்பட விஞ்ஞான பாடங்கள் 3 இனை ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல் | (i) அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப கல்லூரியினால் உரிய துறைக்குரிய தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (சிவில்) பெற் றிருத்தல். (மூன்று வருட இடைகாலப் பயிற்சி பாடநெறி) |

| பதவிப் பெயர் | பதவிக்கான க. பொ. த. (சா.த.) தகைமை | ஒவ்வொரு பதவிக்கான க. பொ. த. (உ. த) தகைமை | தொழில்நுட்ப தகைமை |
|---|---|---|---|
| 3. தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) பயிற்றுவிக்கும் தரம் (இரண்டு வருட) | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். | க. பொ. த. (உ.தர) பரீட்சையில் பிரயோகக் கணிதம்/ தூய கணிதம்/ இணைந்தக் கணிதம் மற்றும் பௌதிக விஞ்ஞானம் உட்பட விஞ்ஞான பாடங்கள் 3 இனை ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல் | |
| 3. வரையுநரை பயிற்றுவிக்கும் தரம் (ஒரு வருட) | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். | க. பொ. த. (உ.தர) பரீட்சையில் பிரயோகக் கணிதம்/ தூய கணிதம்/ இணைந்தக் கணிதம் மற்றும் பௌதிக விஞ்ஞானம் உட்பட விஞ்ஞான பாடங்கள் 3 இனை ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல் | (i) அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப கல்லூரியினால் உரிய தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (ஒரு வருட பூரண கால பயிற்சி பாடநெறி) வெற்றிகரமாக பூர்த்தி செய்து உரிய சான்றிதழினை பெற்றிருத்தல். |

**க. வே.** - மேற்கூறப்பட்ட எல்லா கல்வி மற்றும் வேறு தகைமைகள் 2015.11.24 ஆந் திகதிக்கு முன் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

2.1 **தொழில்நுட்ப அலுவலர்/படவரை கலைஞர்களை பயிற்றுவிக்கும் தரம் (ஒரு வருடம்).-**
மேற்கூறப்பட்ட I ஆம் பதவி பெயரில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) II "ஆ" பிரிவிற்கு (III தரத்திற்கு) போதியளவிலான விண்ணப்பதாரிகள் இல்லாதிருந்தால் மாத்திரம் இந்த பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்து கொள்வதற்கும் படவரை கலைஞர்கள் மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளின் கீழ் சேர்த்துக்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவ்வாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் சேவைக்குரிய பாடவிதானத்துக்கு அமைய பெற்றுக்கொள்ளும் ஒரு வருட சட்ட ரீதியான செயல்முறை பயிற்சியினை வெற்றிகரமாக முடிவுறுத்தி உரிய பரீட்சையில் சித்தியடைந்த பின்பு II "ஆ" பிரிவிற்கு (III தரம்) உரிய சம்பள திட்டத்தில் ஆரம்ப நிலையில் வைக்கப்படும்.

2.2 **தொழில்நுட்ப அலுவலர்/பயிற்றுவிக்கும் தரம் (இரண்டு வருடம்).-**
மேற்கூறப்பட்ட தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) II "ஆ" பிரிவு (III தரம்) பயிற்றுவிக்கும் தரத் (ஒரு வருட) துக்காக போதியளவிலான விண்ணப்பதாரிகள் இல்லாதிருந்தால் பதவிப் பெயர் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சாதாரண தரமும் உயர் தர கல்வித் தகைமைப்படி மாத்திரம் தெழில்நுட்ப அலுவலர் பயிற்றுவிக்கும் தரத்து (இரண்டு வருட)க்காக விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். அந்த விண்ணப்பதாரிகள் சேவைக்குரிய பாடவிதானத்துக்கு அமைய பெற்றுக்கொள்ளும் இரண்டு வருட சட்டரீதியான செயல்முறை பயிற்சியினை வெற்றிகரமாக முடிவுறுத்தி உரிய பரீட்சையில் சித்தியடைந்த பின்பு III தரத்திற்கு உரிய சம்பள திட்டத்தில் ஆரம்ப நிலையில் வைக்கப்படும்.

2.3 மேற்குறிப்பிடப்பட்டுள்ள 2.1 மற்றும் 2.2 கூறப்பட்டுள்ள பயிற்சியின் பின் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியடைவதற்கு இயலாது போகும் தொழில் பயிலுநர்கள் இருப்பின் அவர்களுக்கு 6 மாதத்திற்கு மேற்படாத காலத்திற்காக உரிய பயிற்சி காலத்தினை நீடித்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் உண்டு. அவ்வாறு நீடிக்கப்படுகின்ற கால முடிவில் மீண்டும் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியடையாத பயிலுநர்களின் சேவை இடைநிறுத்தப்படும்.

**3. சம்பளத் திட்டம்:**

**3.1 தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) II "ஆ" பிரிவு III தரம்**
ரூபா 15,005-180×4-240×6-320×11-360×20-ரூபா 27,885 ஆகும்.
(பொது நிருவாக சுற்றுநிருபம் 6/2006 (IV) இல் MN3-2006A சம்பளத்திட்டம்)

**3.2 தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) படவரை கலைஞர் - பயிற்றுவிக்கும் தரம்**
பொது நிருவாக சுற்றுநிருபம் 6/2006 II இல் 14 ஆம் பந்தியில் 9 ஆம் ஒழுங்குகளுக்கமைய பயிலும் காலத்தினுள் கீழ் காணப்படுமாறு கொடுப்பனவு செலுத்தப்படும்.
முதலாம் வருடம் மாதாந்தம் 12,920 ரூபா.
இரண்டாம் வருடம் மாதாந்தம் 13,040 ரூபா மாதக் கொடுப்பனவு செலுத்தப்படும்.

**4. சேவை உடன்படிக்கை:**

4.1 தொழில்நுட்பவியல் சேவையில் II வகுப்பில் "ஆ" பிரிவிற்கு (III தரத்திற்கு) உரிய தகைமை உடைய விண்ணப்பதாரிகள் தொழில்நுட்பவியல் சேவையில் II வகுப்பில் "ஆ" பிரிவிற்கு (III தரத்திற்கு) சேர்த்துக்கொள்ளப்படுவர்.
4.2 பயிற்றுவிக்கும் தரத்திற்கு உரிய தகைமை உடைய விண்ணப்பதாரிகள் பயிற்றுவிக்கும் தரத்திற்கு சேர்த்துக்கொள்ளப்படுவர்.
4.3 தொழில்நுட்பவியல் சேவையில் II வகுப்பில் "ஆ" பிரிவிற்கு (III தரத்தின்) பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதும் விதவைகள், தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும்.
4.4 இந்த பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் உரியவாறு 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உள்ளாக்கப்படுவர்.
4.5 தற்போது வடமேல் மாகாண சபையில் நிரந்தர சேவையில் உள்ள அலுவலர் ஒருவராயின் விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு அண்ணளவாக 5 வருடத்தினுள் உரிய திகதிக்குரிய சம்பள ஏற்றங்களை பெற்றிருக்க வேண்டியதுடன் சேவைக் காலம் திருப்திகரமானதாக இருத்தல் வேண்டும்.
4.6 ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அலுவலர்கள் வடமேல் மாகாணத்தினுள் இடமாற்றங்களுக்கு கீழ்படிதல் வேண்டும். வடமேல் மாகாண அதிகாரப் பிரிவினுள் குறிப்பிடப்படுகின்ற எந்தவொரு பிரதேசத்திலும் கட்டாயமாக 5 வருடம் சேவை செய்வதற்கு உடன்படுதல் வேண்டும். வேறு மாகாணங்களில் இருந்து இப்பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்துக்கொண்டால் அவர்கள் பத்து வருடகாலம் கட்டாயமாக வடமேல் மாகாணத்தில் சேவை செய்வதற்கான உடன்படிக்கைக்கு கீழ்படிதல் வேண்டும்.

தாபனக் கோவையில் I ஆம் பகுதியில் II ஆம் அத்தியாயத்தில் 10 தொடக்கம் 12 வரையிலான பந்திகளில் உள்ள ஒழுங்குகள் பதவிக்கு பொருந்தும் வகையில் உரித்தாகின்றது.மேலும் இந்த பதவிக்காக ஆட்சேர்ப்பு/பதவி உயர்வு செய்யும் சேவை பிரமாணக் குறிப்பின் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் நிபந்தனைகளுக்கும், வடமேல் மாகாணத்தின் நிதித்திட்டக்கோவைக்கும் ஒழுக்காற்று செயல் கோவைக்கும், திணைக்கள கட்டளைகளுக்கும், இலங்கை தொழில்நுட்பவியல் சேவை விதிமுறைக்கும் அரச மற்றும் வடமேல் மாகாணத்தினால் வெளியிடப்பட்டுள்ளதும் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற வேறு நிபந்தனைகளுக்கும் கட்டளைகளுக்கும் இணங்கி செயல்படுவதற்கு எல்லா அலுவலர்களும் கட்டுப்படுதல் வேண்டும்.

**5. ஆட்சேர்ப்பு முறை:**

5.1 வெற்றிட எண்ணிக்கையினை விட குறைந்த எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் சமரப்பிக்கப்பட்டிருக்கும் சந்தரப்பத்தில் தகமைகளை பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சை மூலம் சேர்த்துக்கொள்ளப்படுவர். வெற்றிட எண்ணிக்கையினை விட அதிகளவில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படுகின்ற பரீட்சையின் பெறுபேற்றின்படி ஆட்சேர்ப்பு நடைபெறும். இந்த பரீட்சை வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் குருநாகலில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கின்ற மொழியை பின்பு மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.2 ஆட்சேர்ப்பு செய்யப்படும் நூற்று வீதம்.-
(அ) தொழில்நுட்ப அலுவலர் /வரையுநர்
திறந்த போட்டிப் பரீட்சையினால் 70% உம் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையில் 30%.

5.3 பரீட்சை பாடவிதானத்தில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளை தேர்ந்தெடுத்து அவர்களின் அந்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகைப்படி ஆட்சேர்ப்பிற்கான முன்னுரிமை அட்டவணையினை ஒழுங்குபடுத்தப்படும். அந்த அட்டவணையின் ஒழுங்கு வரிசைப்படியும் வெற்றிட எண்ணிக்கைப்படி தகைமைகளை பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

5.4 உரிய துறையில் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக தகுதி உடைய திணைக்கள சேவையாளர்கள் இல்லாதிருந்தால் மொத்த வெற்றிட எண்ணிக்கைகளையும் திறந்த போட்டிப் பரீட்சை பெறுபேறுப்படி நிரப்பப்படுவதுடன், அதனை வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானப்படி நடைமுறைப்படுத்தப்படும்.

6. **பரீட்சை பாடவிதானம்**:
பரீட்சை கேள்வி பத்திரங்கள் இரண்டாகும். விரிவாக பரீட்சை விடய சிபாரிசு கீழ் காட்டப்பட்டுள்ளது.

| பதவி | கேள்வி பத்திரம் | காலம் | புள்ளி |
|---|---|---|---|
| 1. தொழில்நுட்ப அலுவலர் II "ஆ" (III தரத்திற்கு)<br>2. படவரை கலைஞர் | சவால்கள் பரிசீலனை | 1 மணி | 100 |
| 3. தொழில்நுட்ப அலுவலர் (பயிற்றுவிக்கும் தரம் ஒரு வருடம்) | தொழில்நுட்ப கேள்வி பத்திரம் | 3 மணி | 100 |
| 4. தொழில்நுட்ப அலுவலர் (பயிற்றுவிக்கும் தரம் இரு வருடம்) | சவால்கள் பரிசீலனை | 1 மணி | 100 |

**க. வே.**- ஆட்சேர்ப்பிற்கான தகைமை பெறுவது ஒவ்வொரு கேள்விப்பத்திரங்களுக்காகவும் 40% புள்ளி அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்றால் மாத்திரமாகும்.

6.1 **விரிவான பாடவிதானம்**

1. பொது விவேகம் (காலம் 1 மணி 100 புள்ளி)

(அ) தொழில்நுட்ப அலுவலர் II "ஆ" /படவரையுநர், தொழில்நுட்ப அலுவலர் பயிற்றுவிக்கும் தரம் ஒரு வருடம், தொழில்நுட்ப அலுவலர் பயிற்றுவிக்கும் தரம் இரண்டு வருடம்
விண்ணப்பதாரிகளின் மொழித்திறன், கணித திறமை மற்றும் நட்புறைமை சக்தி, அளவிடுதலுக்காக உபயோகப்படுத்தப்படும் சுருக்க மற்றும் பரவலான நடைப்பாங்கு கேள்விகளினால் உள்ளடங்கியது.

2. தொழில்நுட்ப கேள்வி பத்திரம் (காலம் 3 மணி. 100 புள்ளி)

(அ) தொழில்நுட்ப அலுவலர் II "ஆ", தொழில்நுட்ப அலுவலர் பயிற்றுவிக்கும் தரம் ஒரு வருடம்
கட்டிடம் கட்டமைக்கும் ஒழுங்குமுறை விதி, கட்டமைப்பு நடவடிக்கைக்காக வரைபுத் திட்டத்தினை ஒழுங்குபடுத்தல் மற்றும் வாசித்து புரிந்துக் கொள்ளும் இயலுமை, நீர் வழங்கள் மற்றும் நீர் வடிகாலமைப்பு, கழிவுப் பொருட்களை வெளியேற்றும் நடவடிக்கைப் பற்றி எதிர்பார்ப்பவருக்குரிய பாரம்பரிய இயலுமையினை பரிசீலிப்பதற்கான கேள்விகளை உள்ளடக்கியதாகும்.

(ஆ) படவரை கலைஞர்.-
கட்டிட நிர்மாண கலை பற்றிய அறிவு, அளவிற்கேற்ப வரைதல், திட்டம் அல்லது அண்ணளவான குறிப்பினை புரிந்துக்கொள்ளும் திறமை, பரவலான நிர்மாணம் பற்றி ஆரம்ப அறிவு, நுணுகி ஆராய்தல் பற்றிய அறிவு, வடிவியல் (கேத்திர கணிதம்) மற்றும் இயந்திர வரைபு பற்றிய ஆரம்ப அறிவினை பரீட்சிக்கும் கேள்வி உள்ளடங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி பத்திரங்களுக்கு விடையளிப்பதற்காக தேவையான வடிவமைப்பு (கேத்திர கணித) உபகரணம் மற்றும் மற்றைய உதிரிப்பாகங்கள் விண்ணப்பதாரியினால் பரீட்சை நிலையத்திற்கு எடுத்துவரல் வேண்டும்.

7. **போலித் தகவலுக்கான தண்டனை**.- விண்ணப்பப் படிவத்தினை நிரப்பும் போது கவனமாக உண்மையான தகவல்களை வழங்க வேண்டும். இந்த பரீட்சையின் சட்டத்திட்டங்களின் படி எந்தவொரு விண்ணப்பதாரிக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமையற்றவர் என்று தெரிய வந்தால் பரீட்சைக்கு முன்பு அல்லது பரீட்சை நடாத்திச் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது பரீட்சையின் பின்பு அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்த தகைமையை இரத்து செய்யமுடியும். விண்ணப்பதாரிகளினால் சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிழையானது என்று தெரியவந்தால் அவரை வடமேல் மாகாண சபை அரச சேவையில் இருந்து விலக்குவதற்கு முடியும். பரீட்சார்த்த தகைமையை பத்திரம் வழங்குதல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளை பூர்த்தி செய்து உள்ள பற்றி ஏற்றுக்கொள்வதானது என்று கருத வேண்டாம்.

*8. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணமாக 500 ரூபா தொகையினை வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் வருமான தலைப்பு 2003-02-13 இற்கு வைப்பில் இடக்கூடியவாறு வடமேல் மாகாணத்தில் வதியும் விண்ணப்பதாரிகள் தாம் நிரந்தரமாக வசிக்கும் பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளர் அலுவலத்திற்கு அத்தொகையினை செலுத்த வேண்டும். வடமேல் மாகாணத்தில் குடியிருக்காத விண்ணப்பதாரிகள் வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் வருமான தலைப்பு 2003-02-13 இற்கு வைப்பில் இடக்கூடியவாறு இந்த அலுவலகத்திற்கு பரீட்சைக் கட்டணத்தினை செலுத்த முடியும். அவ்வாறு இல்லாதுவிடின் வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் பெயருக்கு கட்டளை மூலம் செலுத்த முடியும். அவ்வாறு நிதி செலுத்திப் பெற்றுக்கொண்ட வ. ம. ச. நி. 02 பற்றுச்சீட்டினை அல்லது நிதிக் கட்டளையினை விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற் படப்பிரதி ஒன்றினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.) பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளத் திருப்பி செலுத்துவதற்கு அல்லது வேறொரு பரீட்சைக்கு மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதனை கவனத்தில் கொள்ளவும்.*

*9. **விண்ணப்பிக்கப்பட வேண்டிய முறைகள்**.-*

*விண்ணப்பப் படிவம் A4 (21×29 செ. மீ.) அளவிலான தாளை உபயோகிக்கவும்.*

(i) *இலக்கம் 1 தொடக்மக் 4 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும்*
(ii) *இலக்கம் 4 தொடக்கம் மற்ற பந்திகளை அடுத்த பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பப் பத்திரத்தினை தயாரிக்க வேண்டும்.*
(iii) *தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவத்தில் 01 தொடக்கம் 11 வரை எல்லா பகுதிகளையும், மற்றைய விண்ணப்பதாரிகள் இலக்கம் 1 தொடக்கம் 10 வரையிலான எல்லா பகுதிகளையும் பூர்த்தி செய்து விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.*

*அறிவித்தலில் குறிப்பிடப்பட்டள்ள தகமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தினை பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கமைய உள்ளதா என்பது பற்றி விண்ணப்பதாரியினால் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமையாத பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி இரத்துச் செய்யப்படும். விண்ணப்பப் படிவத்தின் நிழற் படப்பிரதி ஒன்றினை விண்ணப்பதாரிகள் தங்களிடம் வைத்தக் கொள்வது பிரயோசமானதாகும். விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரத்தினை உடைய அலுவலர். பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியினை வகிக்கும் அலுவலர் ஒருவர் அல்லது 240,360 ரூபாவிற்கு மேற்பட்ட ஆரம்ப வருட சம்பளத்தினை பெறும் அரச நிரந்தர பதவியினை வகிக்கும் அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.*

*10. விண்ணப்பப் படிவத்தினை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பரீட்சையின் பெயரினை தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டியதுடன், ஒவ்வொரு பரீட்சைக்காகவும் வெவ்வேறாக விண்ணப்பப்படிவம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை 2015.11.24 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு "செயலாளர், வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களுக்கமைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்படும். அனுமதி அட்டை கிடைக்காவிட்டால் கீழ் காணப்படும் தகவல்களுடன் வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அறிவித்தல் வேண்டும்.*

*1. விண்ணப்பப் படிவம் மற்றும் நிதி செலுத்திய பற்றுச்சீட்டினை உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று;*
*2. பதிவு செய்த பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற் பிரதி ஒன்று*
*3. வடமேல் மாகாணத்திற்கு வெளிப் பிரதேசத்தில் என்றால் அனுமதிச்சீட்டினை அனுப்பவேண்டிய தொலைநகல் இலக்கம்.*

*11. **ஆள் அடையாளம்**.- தாம் பரீட்சைக்கு தோற்றும் சகல பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டப பொறுப்பாளர் திருப்தியடையக் கூடியவாறு சகல பரீட்சார்த்திகளும் தமது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். இதற்காக (அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆள் அடையாள அட்டை, (ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ஏற்றுக்கொள்ளப்படும்.*

*12. இப்பரீட்சையினை நடாத்துவது அல்லது நடாத்தாதது பற்றி அல்லது நடாத்துவதற்கு தேர்ந்தெடுப்பது வெற்றிட எண்ணிக்கை பற்றி கடைசித் தீர்மானம் வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவிற்கு உரியதாகும். அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவதொரு தகவல்கள் இருப்பின் அது பற்றி விளக்குவது/தீர்மானிக்கும் உரிமை வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குரியதாகும்.*

வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

காந்தி வேஹெல்ல,
செயலாளர்,
வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு.

வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
குருநாகல், 037-2233769
2015, ஒற்றோபர் 09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வடமேல் மாகாண அரசாங்க சேவையில் இலங்கை தொழில்நுட்பவியல் சேவைப் பதவிக்காக ஆட்சேர்க்கும் திறந்த போட்டிப் பரீட்சை - 2015**

(விண்ணப்பிக்கும் பதவி)

(அலுவலக உபயோகத்திற்காக)

பதவிக்குரிய இலக்கம்

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் (உரிய கூட்டில் (✓) இடவும்)

சிங்களம் தமிழ் ஆங்கிலம்

1. பெயர் :
   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr/Mrs/Miss :-----.
   (ஆங்கில பெரிய எழுத்தில்) உதா : RATHNAYAKA R. M. T.
   1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.
   1.3 முழுப்பெயர் (சிங்களத்தில் /தமிழில்) :-----.
   1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :
   1.5 நிரந்தர முகவரி :-----.
   (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.
   1.6 நிரந்தர முகவரி :-----.
   (சிங்களத்தில் /தமிழில்) :-----.
   1.7 அனுமதிப்பத்திரத்தினை அனுப்ப வேண்டிய முகவரி :-----.
   1.8 தொலைபேசி இலக்கம் :-----.

2. 2.1 பால் : ஆண் /பெண் பெண் - F ஆண் - M

   2.2 பிறந்த திகதி :
   ஆண்டு மாதம் திகதி

   2.3 2015.11.24 ஆந் திகதியன்று வயது :
   வருடங்கள் மாதங்கள் நாட்கள்

3. 3.1 விண்ணப்பதாரிக்குரிய நிருவாக மாவட்டம்:-----.
   3.2 பிரதேச செயலாளர் பிரிவு :-----.
   3.3 கிராம அலுவலர் பிரிவு :-----.

4. கல்வித் தகைமைகள் :-
   4.1 க.பொ.த. (சா. தர) பரீட்சை பற்றிய விபரம் :-----.
   முதலாம் அமர்வு - வருடமும் மாதமும் :-----. பரீட்சை சுட்டெண் :-----.
   இரண்டாம் அமர்வு - வருடமும் மாதமும் :-----. பரீட்சை சுட்டெண் :-----.

| | பாடம் | முதலாவது அமர்வு தரம் | இரண்டாவது அமர்வு தரம் | | பாடம் | முலாவது அமர்வு தரம் | இரண்டாவது அமர்வு தரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 6 | | | |
| 2 | | | | 7 | | | |
| 3 | | | | 8 | | | |
| 4 | | | | 9 | | | |
| 5 | | | | 10 | | | |

4.2 க.பொ.த. (உ. தர) பரீட்சை பற்றிய விபரம் :-----.
பரீட்சையின் - வருடமும் மாதமும் :-----. பரீட்சைச் சுட்டெண் :-----.

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 3 | | |
| 2 | | | 4 | | |

5. தொழில்நுட்ப தகைமை :-----.

| நிறுவனம் | கற்ற பாடநெறி | கால எல்லை | தரம் | சான்றிதழின் இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

6. வேறு தகைமைகள் :-----.

7. நீங்கள் எப்போதாவது ஏதாவதொரு குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? :------.

ஆம் ☐ இல்லை ☐

(உரிய கூட்டினுள் குறிப்பிடவும்) (ஆம் ஆயின் விபரிக்கவும்)

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரம் : -
(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலாளர் அலுவலகம் :-----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கம், திகதி மற்றும் செலுத்திய தொகை :-----.

(பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும்.)

9. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :

(அ) இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல் எனக்கு தெரிந்தளவில் உண்மையானதும், பிழையற்றதும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். இங்குள்ள ஏதாவதொரு பகுதி பூர்த்திசெய்யாமலும் பிழையாக பூர்த்திசெய்ததனால் ஏற்படுகின்ற நஷ்டத்தினை ஏற்றுக்கொள்வதற்கு நான் உடன்படுகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள எல்லா பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளதாக தெரிவித்துக்கொள்கின்றேன். பரீட்சையின் எல்லா நிபந்தனைகளையும் பின்பற்றுவதற்கு நான் உடன்படுகின்றேன்.

(ஆ) என்னால் தரப்பட்டுள்ள இந்த தகவல்கள் பொய்யானது என்று உறுதிப்படுத்தப்பட்டால் இந்த பதவிக்கு நியமிக்க முன்பே தகுதியற்றவர் என்றும் நியமனம் கிடைத்த பின்பு தெரியவந்தால் நியமனத்தினை முடிவுறுத்துவதற்கும் நான் ஆளாவேன் என்றும் எனக்கு தெரியும்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

10. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**:

இந்த விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ........................................................................................ எனக்கு தனிப்பட்ட வகையில் தெரிந்தவர் என்றும் அவர் என் முன்னிலையில் ............................. ஆந் திகதி அவரின் கையொப்பத்தினை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர்:-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.
(பதவி முத்திரையினால் உறுதிப்படுத்தவும்)

12. ***திணைக்களத் தலைவரின் உறுதியுரை :***

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களையுடைய திரு./திருமதி/செல்வி ..................................................................................... இவ் அலுவலகத்தில் சேவை செய்கின்றார் என்றும், அவரின் சேவை திருப்திகரமானது என்றும் இந்த பரீட்சையின் பெறுபேற்றின்படி நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானது என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர்:-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.
(பதவி முத்திரையினால் உறுதிப்படுத்தவும்)

10-900